ஆதாயம் கோரியே அள்ளி அள்ளி கொடுத்தோம்!

Phone No 4502
விலை அரை அணா
Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A.
MALAI MANI
(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

66

மலர் 1] சென்னை (11—5—50) வெளியூர் (12—5—50) [இதழ் 249

காந்தியார் மீது கொண்ட காருண்யமோ அன்போ அல்ல

என்னைப் பொருத்தமட்டில் இதுதான் உண்மை

'சர்க்கார் சலுகை தாராளமாகக் கிடைக்குமென்றே நம்பினர் என் சகாக்கள்'

காந்தியார் நிதி வசூலிக்கப்பட்டது பற்றி முதலாளி டால்மியா கூறும் உண்மை!

"தர்மசிந்தனையாலோ அல்லது உயிர்நீத்த உத்தமரின் மீதிருந்த பக்தியாலோ நாம் 5 கோடி ரூபாயைக் காந்தியார் ஞாபகார்த்த நிதிக்குத் தரவில்லை; காந்தியார் நிதிக்குத் தாராளமாகப் பண உதவி செய்தால், அதிகாரிகளின் சலுகைகள் பெறலாம்; கள்ளமார்க்கெட் வியாபாரம் செய்தாலும், மற்றும் சர்க்காரை ஏமாற்றிப் பொதுமக்கள் பணத்தை எவ்வளவு சுரண்டினாலும் குற்றங்களைப் பகிரங்கமாக்காமல் சர்க்கார் சலுகை காட்டி மூடுமந்திரம் செய்து விடுவார்கள், என்ற எண்ணத்தால்தான்" என்று இந்திய முதலாளிகள் வரிசையில் முக்கிய இடம் பெற்றுள்ள தோழர். சேத் ராமகிருஷ்ண டால்மியா கல்கத்தாவிலிருந்து ஒரு அறிக்கைவிட்டார்,

காந்தியார் நிதிக்கு ரூ. 100 கோடி வசூலிக்கமுயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டதென்றும், ஆனால் இதுவரை ரூ 10 கோடிதான் வசூல் ஆகியுள்ளதென்றும், இதில் சரி பாதி தொழில் முதலாளிகளால் கொடுக்கப்பட்டதென்றும் அவர் அந்த அறிக்கையில் கூறுகிறு...

அவர் மேலும் கூறுவதைப் பாருங்கள், "சர்க்காரின் சலுகைகள் பெறலாம் என்று நினைத்தவர்களில் நானும் ஒருவன், அதனால்தான் எனனுடைய குடும்பத்தார் பேரால் நடக்கும் தொழில் டலவற்றின் மூலம், டல லட்சம் ரூபாயை நன்கொடை கொடுத்தேன். உண்மையில் இது நல்லறம் என்று கூறவே முடியாது. இது போன்றுதான் மற்ற முதலாளிகளும் செய்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன், எடுத்துக் கூறுவது வெட்கப்படக்கூடிய செய்கையானாலும், இது ஒரு மறைக்க முடியாத—மறுக்க முடியாத உண்மை."

* * *

'பிசாசு' கூட தன்னுடைய சொந்தக் காரியங்களைச சாதித்துக் கொள்வதற்காக வேதங்கள் ஓதுமென்று வேதாந்திகள் கூறுவர், அதுபோன்றுதான், இன்று தோழர் டால்மியா உண்மையே பேச ஆரம்பித்திருக்கிறார். அவருடைய நோக்கம்தான் என்னவோ! இரண்டே மாதங்களுக்கு முன்புதான் தோழர் டால்மியாவுக்குத் தெளிவு பிறந்திருக்கிறது திடீரென்று ஒருநாள் கூறினார் இந்தியா ஒரு இந்து ராஜ்யம் ஆகவேண்டுமென்று. பசுக்கொலை பாவம் என்று சிறிதுநாள் பேசிவந்த டால்மியா 'கோ சம்ரட்சணை'க்கு இந்து சாம்ராஜ்யத்தில்தான் இடம் உண்டு என்பதை ஆராய்ந்துணர்ந்துதான், இந்தியா இந்துராஜ்யப் ஆகவேண்டுமென்று வாயால்

மட்டுமல்ல, தனக்குச் சொந்தமான "டைம்ஸ் ஆப் இந்தியா" "இல்லஸ்ட்ரேட் வீக்லி" ஆகிய முக்கியமான ஆங்கில இதழ்களில் அறிக்கைகள் மூலமாகவும் அறிவித்தார். அதைத் தொடர்ந்து காட்டுப் பிசி... வினை என...

...யகளிடையேபிரசாரம் செய்ய ஆரம்பித்தார். அவர்களுக்காகப் பல லட்ச ரூபாயை நன்கொடையளித்தார். 'இந்து ராஷ்டிரம்' திட்டத்தைப் பலப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

'இலட்சிய வரலாறு' வழக்கு

மீண்டும் ஜூன் 7 உக்கு ஒத்திவைப்பு

சென்னை, மே. 10—

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் சி.என். அண்ணாதுரை அவர்கள் தீட்டிய "இலட்சிய வரலாறு" என்ற புத்தகத்தை பற்றி முதல் மாகாண மாஜிஸ்ட்ரேட் முன்பாக நடக்கும் வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஜூன், 7-ந்தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

ஆசிரியர் சி.என். அண்ணாதுரை. வெளியிட்ட தோழர்கள் டி. வி. முத்துகிருஷ்ணன், டி. வி. கண்ணன், அச்சடித்துக்கொடுத்த தோழர் பி ராதாகிருஷ்ணன் ஆகிய, குற்றம் சாட்டப்பட்ட எல்லோரும் வழக்கு மன்றத்துக்கு வந்திருந்தார்கள்

பிரான்சுக்கு அமெரிக்கா ஒருகோடி டாலர் கடன் தரும்

பிரான்சுக்கு அகீஸன் அறிவிப்பு

பாரிஸ், மே 10—

பிரான்ஸ், இந்தோ சீனாவுக்காகக் கொடுக்கப்படும் ராணுவப் பொருளாதார உதவித் திட்டப்படி, முதல் தவணை 10,000,000 டாலர் மதிப்புள்ள தளவாடங்கள் கிடைக்கும் என்று தெரிகிறது.

கீழ்க்கோடியில் கம்யூனிஸத்தை ஒடுக்குவதற்காகவென்றே ஏற்கனவே காங்கிரஸ் அனுமதித்துள்ள 27,000,000 டாலரிலிருந்தே இது அனுமதிக்கப்படவிருக்கிறது.

அடுத்த நிதி ஆண்டிற்கு இந்த காரியத்திற்காக இன்னும் அதிகப் பணம் ... காங்கிரஸை ... கேட்பார் என்று ...கிறது.

இந்தக் கடன் உதவியைப் பெறுவதற்குப் பதில் நடவடிக்கையாக, இந்தோசீனாவுக்கு பிரான்ஸ் அதிக சுதந்திரத்தைத்தரமுன்வரவேண்டும் என்று யு. எஸ் ராஜாங்க மந்திரி கேட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. இதைத் தவிர வேறு நிபந்தனைகள் எதையும் யு எஸ். கேட்டிருப்பதாகத் தெரியவில்லை.

கிழக்கிந்தியகடற்படை தளபதி

கொழும்பு, மே 10—

கிழக்கிந்திய கடற்படையின் புது சேனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள வைஸ் அட்மிரல் ஆலிவர் பதவி ஏற்பதற்காக இங்கு வந்திருக்கிறார்.

இந்திய டெக்னீஷியர்களுக்கு பிரிட்டனில் பயிற்சி

லண்டன், மே 10—

பிரிட்டனில் இந்திய, பாகிஸ்தான் டெக்னீஷியர்களுக்குப் பயிற்சி அளிப்பது பற்றி பிரிட்டிஷ் கைத்தொழில் பெடரேஷனுடன் இந்திய சர்க்காரும், பாகிஸ்தான் சர்க்காரும் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றனர்.

இந்திய பாகிஸ்தான் கோரிக்கைகளை நடத்தி வைக்க கைத்தொழில் பெடரேஷன் உடனேமானவரையில் உதவி செய்யும் என்று சொல்லப்படுகிறது. (குளோப்)

ரஷியா போருக்கு தயாராகிறது

புதிய விமான தளங்கள் பெருகுகின்றன

போர்ப் பயிற்சியும் வலுவடைகிறது

லண்டன், மே. 10—

வடதுருவப் பிரதேசத்தில் ஸோவியத் ராணுவ விமான நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாக, யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

துருவப் பிரதேசங்களில் ரஷ்ய வெடி விமானங்கள் பயிற்சி பெற்று வருவதாகவும் ரஷ்ய பாராசூட் துருப்புகள் இப்பகுதியில் பழக்கப்பட்டு வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

ரஷ்யாவின் வடக்குக் கடற்கரையில், புதுவிடமான தளங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

அமெரிக்காவிடமுள்ள வெடி விமானங்களைப் போலவே, விமானங்களை உற்பத்திச் செய்யவும் ரஷ்யா முயன்றுவருகிறது என்று சொல்லப்படுகிறது.

மலையாள தென்கன்னட மாவட்டங்களுக்கு அரிசி வழங்குதல்

—(0)—

தஞ்சை, சென்னையிலிருந்து அனுப்பப்படும்

சென்னை, மே. 10—

மலையாளத்திலும், தென் கன்னடத்திலும் உணவுப் பொருள்களுக்கான தேவை மிகவும் அதிகமாக இருப்பதால், அதைச் சமாளிக்க சென்னையிலிருந்தும் தஞ்சாவூரிலிருந்தும் அரிசி ஸ்பெஷல் ரயிலில் அனுப்பப்பட்டுவருகிறது.

இன்னும் 5 நாட்களில் மேற்கு வங்கத்திலிருந்து கொச்சி துறைமுகத்திற்கு சில ஆயிரம் டன் அரிசி வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இரு பற்றாக்குறை ஜில்லாக்களுக்கும் 6000 டன் அரிசியை சர்க்கார் ஒதுக்கியிருக்கின்றனர் சென்னை, தஞ்சை, மேற்குவங்கம் இந்த இடங்களிலிருந்து கிடைக்கும் அரிசி எல்லாம் சேர்ந்தே 6000 டன் ஒதுக்கப்பட்டிருக்கிறது

கனடா நகரில் பெரும் தீ விபத்து

ஒட்டவா, மே 10—

வின்னிபெக்கில் ஏற்பட்ட வெள்ளத்தினாலும், ரிமோஸ் நகரில் ஏற்பட்ட தீ விபத்தினாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்கும் வேலை மும்முரமாக நடைபெற்றுவருகின்றன.

இன்னும் மழை பெய்வதால் இரண்டு நாட்களில் மேலும் வெள்ளம் அதிகரிக்கலாம் என்று முன்னெச்சரிக்கை அறிவிக்கப்பட்டிருக்கிறது. வின்னிபெக் நகரில் மேலும் மூன்று பகுதிகளிலுள்ளவர்களை வெளியேறிவிடும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ரிமோஸ்கில் ஏற்பட்ட தீ சுமார் 30 மணி நேரம் எரிந்ததாம். சுமார் 2500 பேர் வீடில்லாது தவிக்கின்றனர். இந்த நகர் மீண்டும் பழைய நிலைமை அடையவேண்டுமென்றால் குறைந்தது 25 வருடங்களாகும் என்று அந்நகர் மேயர் கூறுகிறார்.

அய்யலூருக்கருகில் ரயில் விபத்து

திருச்சி, மே. 9—

மதுரை-சென்னை பார்சல் எக்ஸ்பிரசின் எஞ்சின், தண்டவாளத்தை விட்டிறங்கி விட்டதால் திருச்சிக்கும் மதுரைக்குமிடையே நேர் ரயில் சர்வீஸ் இன்று பிற்பகல் 1 மணியிலிருந்து பாதிக்கப்பட்டிருக்கிறது.

திருச்சியிலிருந்து சுமார் 40 மைல் தூரத்தில் அய்யலூருக்கும், கல்பட்டி சத்திரத்திற்குமிடையே இந்த விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தின் காரணம் தெரியவில்லை. நடுப்பாதையில் தடை ஏற்பட்டுவிட்டதால் நேராகச் செல்லவேண்டிய ரயில்கள் அனைத்தும், மானாமதுரை வழியாக விடப்படுகின்றன.

ஸ்பெயின்-லெபனன் உடன்படிக்கை

லெபனீஸ் சர்க்காரும், ஸ்பெயின் சர்க்காரும் நட்பு உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டிருக்கின்றன ஸ்தானிக நியமன உடன்படிக்கை, வர்த்தக உடன்படிக்கை இவைகளும் இதில் சேர்ந்தவையே

மாலை மணி

சென்னை 11—5—50 வியாழக்கிழமை

எண்ணிப்பார்க்க :: :: வேண்டாமா?

"காங்கிரஸ்காரர்கள் நாட்டுக்கு சேவை செய்யாமல், பதவியில் மட்டுமே இருந்து கொண்டிருக்க வேண்டும் என்று நினைப்பார்களாயின், இவர்கள் மட்டுமேதான் பதவியில் இருந்து கொண்டிருக்க வேண்டும். இவர்களுக்குப் பின்னால் ஆதரவு தரும் மக்கள் இருக்க முடியாது. நாட்டில் நல்லாட்சி நிலவ வேண்டுமானால், பதவியிலிருக்கும் ஆட்சி 10-ஆண்டுகளுக்காவது நீடித்து நிற்கவேண்டும். ஒருபுறம் லட்சியமும், மற்றொருபுறம் சண்டை சச்சரவுமாக இருந்தால், சீனாவுக்கு ஏற்பட்ட கதிதான் இந்தியாவுக்கும் ஏற்படும் என்பதை, காங்கிரஸ்காரர்கள் கவனிக்க வேண்டும்."

"இந்த நாட்டில் நூற்றுக்கு தொண்ணூறு பேருக்கு உண்ண உணவு, உடுக்க உடை, குந்த குடிசை இல்லை இந்நிலையில் அரசாங்கமும், நாமும் பொது மக்கள் ஆதரவைப் பெற்று சேவை செய்ய முன்வரா விட்டால், முப்பது ஆண்டுகள் சேவை செய்து பெற்ற சுதந்திரத்தை இழந்தவர்களாவோம்"

நன்னிலம் தாலுக்கா நிர்மாண ஊழியர் மாநாட்டில், முன்னாள் சென்னை முதலமைச்சர் தோழர் ஓமந்தூர் இராமசாமியார் ஆற்றியுள்ள தலைமையுரையிலே காணப்படும் கருத்துரைகளே மேலே தரப்பட்டிருப்பவை.

தோழர் ஓமந்தூராரைப்பற்றி தமிழ் நாட்டவர்க்கு அதிகமாக நாம் ஏதும் கூறத் தேவை இல்லை; காந்தியாரே ராஜ்யத்தைக் கடைப்பிடிக்க ஒரோருக்கால் தவறியிருக்கலாமே யொழிய, நமது ஓமந்தூரார் ஒருபோதும் அவ்வழி விட்டு அப்புறம் செல்லார். அத்தகைய உத்தமர் அவர்; தனது உத்தமதன்மைக்குத்தன்னையே பலியாக்கிக்கொண்டு, பட்டம் பதவிகளைக்கூடத் துறந்திருப்பவர். அவ்வப்போது காங்கிரசின் ஊழல்களைக் கண்டு அகங்குழைந்துவாடுபவர்; காங்கிரசின் ஊழல் கரைகடந்துவிட்டது, இனி அதனைத் தடை செய்ய இயலாது என்பதைக்கூட உணர மறுக்கும் அளவுக்கு காங்கிரசினிடத்தும், காங்கிரஸ் கொள்கைகளிடத்தும் பற்று கொண்டவர்.

அப்படிப்பட்டவர் கூறுகிறார் அழகாக, திருத்தமாக, தெளிவாக "இந்த நிலை நீடித்தால் இந்தியா சீனாவாகும்" என்று!

அதுமட்டுமல்ல; இந்த நாட்டில் நூற்றுக்கு தொண்ணூறு பேருக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடமில்லை. இதற்குக் காரணம், காங்கிரஸ்தான் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.

இவ்விரு கருத்துரைகளும் வெற்றுரைகளாகா. ஆட்சியாளர் நிலை கண்டு—அவர்தம் அலட்சியப் போக்கு கண்டு-காங்கிரசின் கருத்தற்ற செயல்கள் கண்டு-காங்கிரஸ் கோட்டைக்குள்ளேயே நடைபெறும் குத்துவெட்டுகளைக் கண்டு-காங்கிரஸ் கட்டெறும்பாகத் தேய்ந்து வரும் காட்சியைக் கண்டு கலங்கி, கசிந்து கண்ணீர் மல்கும் காட்சி இது.

கண்ணீர்விட வேண்டிய நிலையிலே இருந்தபோதிலும், காங்கிரசின் மானங்காக்கும் பொருட்டு, அந்தக் கண்ணீரை மறைத்துக்கொண்டு, காங்கிரசாருக்கு எச்சரிக்கைவிட்டிருக்கிறார்.

சேவை செய்யாமல் ஆட்சிப் பீடத்தில் மட்டும் அமர்ந்திருந்தால், மக்களுடைய ஆதரவை இழக்க நேரிடும் என்று எச்சரிக்கிறார் ஓமந்தூரார்.

ஓமந்தூரார் நம்பிக்கொண்டிருக்கிறார் இன்னமும் காங்கிரசாருக்கு மக்கள் ஆதரவு இருப்பதாக. அந்த ஆதரவு அறுபட்டு நெடுநாட்களாகிறது என்பதை ஓமந்தூரார் போன்ற உத்தமர்கள் எப்படி அறிய முடியும் பாவம்!

சேவை, சேவை என்று அடித்துக்கொள்ளுகிறார். ஆனால் ஆட்சிப்பீடமேறிய காங்கிரஸ் அன்பர்கள் சேவை என்ற சொல்லுக்கு வேறு பொருள் கண்பிடித்துவிட்டனர் என்பதை அவர் மறந்துவிட்டார்போலும்! இன்றைய தினம் ஆட்சியாளர் செய்யும் சேவை, அடக்குமுறை சேவையே யன்றி வேறில்லை. மக்களின் பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டம் கூடும் உரிமை இன்னபிற உரிமைகளைப் பறிப்பதே அவர்களுடைய சேவையாக இருந்து வரும்போது, ஓமந்தூரார் போன்றவர்களின் உபதேசம் எங்ஙனம் அவர்களின் செவி புகும்?

அன்று காங்கிரசார் பதவியைப் பெறுவதற்கென சேவை செய்தனர். இன்று தாம் பெற்ற பதவியைப் பாதுகாக்க சேவை புரிகின்றனர். இதனைப் பதவி வேட்டை, சுயநலம் என்றெல்லாம் நாம் சொன்னால், அது ஓமந்தூரார்களுக்குப்புரியாது. அவர்களே உபதேசம் செய்து, சீர்திருத்தும் அளவுக்கு ஊழல் மலிந்துவிட்டது இன்று. இப்பொழுதேனும் உணரட்டும் உண்மையை.

தோழர் ராமசாமியார் சுட்டிக் காட்டுகிறார். இந்நாட்டில் நூற்றுக்கு தொண்ணூறு பேருக்கு வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகள் இல்லையென்பதை. அதைத்தான் நாம் நித்தநித்தம் எடுத்துக் காட்டி, இந்நிலையில் ஆட்சியாளர் ஏராளமாய் மாயிருக்கலாமா என்று கேட்கிறோம். கண்டிக்கிறோம், அறிவுறுத்துகிறோம் அவசியமானால் எச்சரிக்கவும் செய்கிறோம் இதற்கு நாம் பெற்ற பரிசு, அடக்குமுறை! இக்கலமாக இப்படிப்பட்டது இல்லை? எண்ணிப் பார்க்க வேண்டாமா?

'கருஞ்சட்டை ஒழியவேண்டுமா?' வழக்கு

ஜூன் 7-ந்தேதிக்கு ஒத்திவைப்பு

சென்னை, மே 10—

"கருஞ்சட்டை ஒழிய வேண்டுமா?" என்ற புத்தகத்தைத் தீட்டிய தோழர் வியாமுன் (புலவர் செல்வராஜ்) அவர்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்கு, முதல்மாகாண மாஜிஸ்ட்ரேட் முன்பு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, ஜூன் மாதம் 7-ந்தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

இந்தோனேஷிய ரப்பர் உற்பத்தி

லண்டன், மே 10—

இந்தோனேஷியா இவ் வருடம் 520000 டன் ரப்பர் உற்பத்திச் செய்யும் என்று, சர்வதேச ரப்பர் ஸ்தாபனம் எதிர்பார்த்ததை அனுபவத்தில் உற்பத்திசெய்யமாட்டமோ என்று லண்டன் நியூயார்க் வர்த்தக வட்டாரங்கள் சந்தேகப்படுகின்றன.

இந்தோனேஷியாவில் நிலைமை அபிவிருத்தியானால் ஒழிய சென்ற வருடத்தில் விளைந்த 431000 டன்களுக்கு மேல் எதிர்பார்க்கமுடியாதென்று லண்டன் நிபுணர்கள் கூறுகின்றனர்.

பல வாரங்களுக்கு முன் இருந்ததைவிட, நிலைமை மிகவும் இப்பொழுது மோசமாக இருக்கிறதென்றும், [illegible] இருந்து [illegible] எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தோனேஷியாவில் ரப்பர் உற்பத்தி அதிகரித்தே வருகிறதென்றும், 1950-ல் 520000 டன் எளிதில் உற்பத்திச் செய்யமுடியும் என்று டச்சு வட்டாரங்களில் கூறப்படுகிறது.

சர்க்கார் மீது ஜவுளி தொழிலாளர் வழக்கு

இஸ்தான்புல், மே 10—

துருக்கி தொழில் மந்திரியால் சஸ்பெண்ட் செய்யப்பட்ட ஜவுளித் தொழிலாளர் சங்கம், துருக்கி சர்க்கார் மீது வழக்குத் தொடரும் எனத் தெரிகிறது. இவ் வழக்கு தொடரப்பட்டால், துருக்கி சிவில் கோர்ட்டில் வரும் இம்மாதிரி வழக்கு இதுவே முதலாவதாகும். இந்தத் தொழில் ஸ்தாபனம் அரசியல் பிரசாரத்தில் இறங்கியதினால் தான் சஸ்பெண்ட் செய்யப்பட்டதாம்.

டாக்கா, மே 10—

கிரிமாவில் எண்ணெய் குழாய்கள் அமைப்பதற்காக தோண்டப்பட்டபோது கி. மு. 1000-வது ஆண்டின் சில சாதன சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டன.

ஞாயிறன்று தபால் பட்டுவாடா

சென்னையில் ஏற்பாடு

சென்னை, மே. 8—

தபாலாபீசுகளில் வார விடுமுறை தினமாக அனுஷ்டிக்கப்பட்ட முதல் ஞாயிற்றுக் கிழமையான நேற்றைய தினம், சென்னை நகரத்திலுள்ள மத்திய தந்தி ஆபீசும், ஏழு தபால்-தந்தி கூட்டு ஆபீசுகளின் தந்திப் பிரிவுகளும் மொத்தம் 1259 அவசரத் தபால்களைப் பட்டுவாடா செய்துள்ளன. மத்திய தந்தி ஆபீஸ் வழக்கம்போல இரவு-பகல் 24 மணி நேரமும் வேலை செய்துவந்தது. வழக்கமான தந்தி வேலைகளுடன்கூட தாமதக் கட்டணம் செலுத்தப்பட்ட கடிதங்களைத் தபால் பெட்டிகளிலிருந்து சேகரிக்கும் வேலையையும், அவசரத் தபால்களைப் பட்டுவாடா செய்யும் வேலையையும் மத்திய தந்தி ஆபீஸ் கவனித்தது. மவுண்ட் ரோடு, வேப்பேரி, திருவல்லிக்கேணி, மைலாப்பூர், தியாகராயநகர், சைதாப்பேட்டை, செண்ட் தாமஸ் மவுண்ட் ஆகிய கிளைத் தபாலாபீசுகளில், காலை 9 மணி முதல், மாலை 5 மணி வரை, அவசர வேலைகளை கவனிப்பதற்கு போதிய சிப்பந்திகள் வேலை செய்து வந்தனர். தந்திகளை ஏற்றுக் கொள்வது, பட்டுவாடா செய்வது ஆகிய வேலையுடன் கூடவே, அவசரத் தபால்கள் பட்டுவாடா செய்யும் வேலையையும் இவர்கள் கவனித்து வந்தனர். அவசரத் தபால்கள் பட்டுவாடா விஷயத்தில், [illegible] தபாலாபீசுகளின் [illegible] சென்னை [illegible] அடங்கியிருக்கும் [illegible] விஸ்தரிக்கப்பட்டுள்ளன; சாதாரணமாகத் தபால் பிரிவு செய்துவரும் ஸ்டாம்பு விற்பனை வேலையையும், ஞாயிற்றுக்கிழமையன்று தந்தி பிரிவுகள் செய்துவந்தன. இந்தத் தபாலாபீசுகளில் மொத்தம் 410 ரூபாய்க்கு நேற்று ஸ்டாம்புகள் விற்கப்பட்டன. மவுண்ட்ரோட் தபாலாபீசில் மாத்திரம் ரூ 104 விற்பனையாயிற்று.

சென்னையில் வேலைசெய்யும் ஆர். எம். எஸ். பிரிவு அவசரத் தபால்களையெல்லாம் தனியாகப் பிரித்து, பிரத்தியோகப் பைகளில் போட்டு இந்தஎட்டு ஆபீசுக்கும் அனுப்பிவைத்தது. முதல் பட்டுவாடாவுக்கான தபால்கள் எல்லாத் தபாலாபீசுகளுக்கும் காலை 9 மணியிலிருந்து 10-மணிக்குள் போய்ச் சேர்ந்துவிட்டன. இந்தக் கடிதங்கள் உடனேயே பிரதேசவாரியாக பிரிக்கப்பட்டு, காலை 10-30 மணி முதல் பட்டுவாடா ஆரம்பமாகிவிட்டது. கல்கத்தாமெயில் தாமதித்துவந்து சேர்ந்ததால், இந்த ரயிலில் வந்த தபால்கள் தபாலாபீசுகளுக்குப் போய்ச் சேருவதில் தகுந்த காலதாமதம் ஏற்பட்டது. இந்த ரயிலில் வந்த அவசரக் கடிதங்கள் பிற்பகலில் பட்டுவாடா செய்யப்பட்டன.

சில நபர்கள் நேற்றுத் தபாலாபீசுகளில் தகவல் விசாரித்ததைக் கவனிக்கும்போது, அவசரத்தபால் பட்டுவாடா ஏற்பாட்டை ஞாயிற்றுக்கிழமைத் தபால் பட்டுவாடா ஏற்பாட்டுடன் அவர்கள் குழப்பிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. சென்னை போன்ற பெரிய நகரங்களில், அவசரத தபால்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரமல்லாமல், எல்லாத்தினங்களிலுமே பட்டுவாடா செய்யப்பட்டு வருகின்றன ஞாயிற்றுக்கிழமை விடுமுறைத் தினமாக அறிவிக்கப்பட்டதற்கு முன்பே இந்த ஏற்பாடு அமுலிலிருந்து வந்தது இப்பொழுது ஞாயிற்றுக்கிழமைகளில் சாதாரணத் தபால்கள் பட்டுவாடா செய்யப்படுவதில்லையாகையால், அவசரத் தபால் பட்டுவாடா ஏற்பாடு ஞாயிற்றுக்கிழமைகளில் பெரிதும் உபயோகமாயிருக்கும்.

ஆதாயம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொட இவ்வாறு செய்துவருகிறார்!

இன்று உணர்ந்து கொண்டார் நேரு சர்க்கார் பலவீனமடைந்துள்ள தென்பதை, முன்னேறும் பிள்ளைகளாகச் சர்க்கார் இருக்கிறார்களென்று நம் கூறிவந்ததை அவர் இன்று கூறிவிட்டார்.

சர்க்காரின் லஞ்ச ஒழிப்புத் திட்டமோ, வரி கொடாமல் ஏமாற்றுகிறவர்களைக் கண்டுபிடிக்கும் கமிஷனோ முதலாளிகளை அசைக்க முடியாது என்பதை அவர் உணர்ந்து கொண்டார். 'சர்க்கார் இவ்வளவு பலவீனமானதென்' பதை நானும், என்னுடைய சகாக்களாகிய மற்ற முதலாளிகளும் கொட்டிக்கொடுத்திருக்கமாட்டோமே காந்தியார் நிதிக்கு என்று கூறுகிறார்.

திருட்டுத்தனமாகவறைச் செய்துவிட்டு சர்க்கார் தண்டிக்க முடியாத நிலையில் இருக்கிறார்களென்பதை உணர்ந்து, அதைப்பகிரங்கமாகத்தோழர் டால்மியா கூறுகிறாரென்றால், அது ஏமாற்றத்தால் மனம் புகைந்து கூறுவதென்று கொள்ளவேண்டுமே தவிர, உண்மையை உரைக்கிறார் உத்தமர் என்று கொள்ளவே முடியாது.

"திருப்பித் தந்து விடுகிறோம்"

டால்மியாவுக்குப் பட்டேல் பதில்

காந்தியார் நிதிபற்றி டால்மியா விட்ட அறிக்கையைப் படித்து மனம் புண்ணான உதவிப் பிரதமர் சர்தார் பட்டேல், தோழர் டால்மியாவும், அவ[illegible] த்தினர் [illegible] எவ்வளவு என்று சொன்னால், அதைத் திருப்பித் தந்துவிடத் தயார் என்று அறிவித்துள்ளார்.

ஆச்சாரியாருக்கு அயல்நாட்டு அமைச்சர் பதவி

சென்னை, மே. 9—

மத்திய அரசாங்கத்தில் மந்திரிப்பதவி ஏற்றுக்கொள்ளும்படி இந்திய குடியரசுத் தலைவர் அனுப்பிய அழைப்பிற்கிணங்கி தோழர் ராஜகோபாலாச்சாரியார் வெளிநாட்டு இலாகா மந்திரிப் பதவியை ஏற்றுக்கொள்வாரென்று தெரிகிறது.

உழைப்புக்கேற்ற ஊதியம் தருக

மந்திரிகளின் உல்லாசச் செலவு குறைய வேண்டும்

கோலார்தங்கவயல் மேதின விழாவில் தோழர் என். வி. நடராஜன்

கோலார் தங்கவயல்— இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பாக கூட்டப்பட்டிருந்த மே தின விழாக் கொண்டாட்டப் பொதுக்கூட்டம், மழையின் காரணமாக 1—2—50 ஞாயிற்றுக்கிழமையிலிருந்து 2—5—50 செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திபோடப்பட்டது.

2—5—50 செவ்வாய்க்கிழமை மேற்படி மே தின விழாப் பொதுக்கூட்டம், உரிகம் தொழிற் சங்கத்திற்கருகாமையில் அமைக்கப்பட்டிருந்த சித்தனேச்சித்தி சிங்காரவேலர் பந்தலில் மாலை 4-மணிக்கு கழகத் துணைச் செயலாளர் கெ. இராகுலன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. அவைத்தில் தோழர் கெ. இராகுலன் அவர்கள், மே தின விழா நோக்கத்தை விளக்கித் தோழர் கோபாலகிருட்டினன் அவர்களை தலைமைவகிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

தோழர் கோபாலகிருட்டிணன் தனது தலைமையுரையில், தொழிலாளர்கள் சூழ்ச்சிக்காரர்களின்வஞ்சக வார்த்தைகளில் சிக்காமல், பாட்டாளியின் வர்க்க உணர்ச்சியையும், உரிமையையும் சம்பாதிக்கவே மே தின விழாவிலே விழிப்புணர்ச்சி பெறவே இவ்வித கூட்டங்கள் என்பதை விளக்கிப் பேசினார்.

மாணவர் தோழர் உ. இன்பதாசன் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த எல்லாத் தொழிலாளர்களையும் மிகவும் அழகுடன் உபசாரத்தி வரவேற்றார்.

அடுத்துப் பேசிய தோழர் டி. கே. சின் [illegible] தினத்தின் முக்கியத்துவ [illegible] தொழிற் சங்கத்திலே கட்சி சார்பற்ற முறையில் தொழிலாளர் தொண்டர்கள் தொண்டாற்ற வேண்டுமென்றும், தொழிற் நிர்வாகிகளுக்குள்ளே ஐக்கியமும், உணர்ச்சியும் வேண்டுமென்றும் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களின் நோக்கங்களை விளக்கியும் பேசினார்.

கடைசியாக தோழர் என். வி. நடராசன் அவர்கள் மே தின விழாவின் சிறப்பையும், மே தின விழா கொண்டாடும் முறைகளையும், ஏன் திராவிட முன்னேற்றக் கழகம் மே தின விழாவைக் கொண்டாடுகிறது என்பதை ஆதாரங்களுடனும், அதன் அவசியத்தையும், இன்றைய காங்கிரஸ் ஆட்சியிலே தொழிலாளர்கள் நடத்தப்படும் கொடுமுறைகளையும், நாட்டின் பொருளாதார சீர்கேட்டையும், தொழிலாளர்களின் அவல கூலியையும், கனம் மந்திரிமார்களின் உல்லாச செலவுகளையும் மாவாரியாக புள்ளி விவரங்களுடன் விளக்கியும், தங்கவயலில் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ள தோழர்களை உடனடியாக வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், சுரங்கத் தொழிலாளர்களின் வேலைக்கேற்ற கூலி கொடுக்கவேண்டுமென கம்பெனியாரையும், மைசூர் தொழில் மந்திரி கே. டி. பாஷ்யம் அய்யங்காரும் ஆவன செய்ய வேண்டுமென்றும், திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர்களுக்கு நேர்முகமான வழியில் தொண்டாற்ற வழிவகுக்குமென்றும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஆதரித்தும், மிகத் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் இரண்டு மணி நேரம் சொற்பொழிவாற்றிய பின், தோழர் டி. கே. சின்னத்துரை நன்றி

வால் [illegible] நன்றிகூறப்பட்டு கூட்டம் இரவு 8 30 மணிக்கு முடிவுற்றது.

தீர்மானங்கள்

1949-ம் ஆண்டு கோலார் தங்கவயலில் வேலையிலிருந்து நீக்கப்பட்ட நான்கு மைனிங்கிளு மூன்று சுமார் 200 தொழிலாளர்களும், அவர்களின் குடும்பங்களும் மிகவும் பாதிக்கப்படுவதால் கம்பெனியார் அவர்களை உடனடியாக வேலைக்குத் திருப்பி எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், இதற்காக மைசூர் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், இவ்வித வேலையிழந்ததோழர்களுக்கு உரிமை கிடைக்கும் வழியில் ஆவன செய்ய வேண்டுமென எல்லாத் தொழிற் சங்கங்களையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

நடந்த 1948-ம் ஆண்டு வேலை நிறுத்த செய்து, தொழிலாளர்களின் ஜீவாதார உரிமைகளுக்காக போராடியதற்காக உரிகம் மைனிங் தொழிற் சங்க நிர்வாகிகளில் 8 பேரை வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். இவ்வாறு நீக்கப்பட்ட இவ்வெட்டுத் தோழர்களின் பரிதாப நிலைமையைக் கண்டு மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென மேசர்ஸ்ஜான் டைலர் அண்ட்சன்ஸ் கம்பெனியாரை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

இன்று இந்தியப் பாராளுமன்றத்தினரால் கொண்டு வரப்பட்டிருக்கும் தொழிற்சங்க மசோதாவானது, தொழிலாளர்களின் உரிமையைப் பறிப்பதாக [illegible] அம்மசோதாவை இக்கூட்டம் எதிர்க்கிறது மற்றும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

லண்டனில் அரேபிய பாதுகாப்பு மந்திரி

லண்டன், மே. 9—

ஸவூதி அரேபிய பாதுகாப்பு மந்திரி அமீர்மன்ஸூர் லண்டன் வந்திருப்பதில், எவ்வித முக்கியத்துவமும் இல்லை என்றும், அவர் சொந்த காரியமாகவே வந்திருக்கிறார் என்றும் ஸவூதி அரேபிய ஸ்தானிகாலயம் அறிவிக்கிறது.

இவர் டாக்ஸில் ஆபரேஷனுக்காகவே இங்கு வந்திருப்பதாகக் கூறப்படுகிறது. இவன்ஸாத் மன்னரின் சுமார் 100 பிள்ளைகளில் இவர் ஐந்தாவதாம்.

கார்ட்டூம், மே 9—

சென்றமாதம் மூன்று நாள் ஸர்ஸுடான் ஸ்டிரைக் நடத்தியதற்காக, ஸர்ஸூனியன் நிர்வாகக்கமிட்டி மெம்பர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 21 நாள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது

செங்கற்பட்டு மாவட்ட

தி. மு. கழக அமைப்புக் கூட்ட அழைப்பு

செங்கற்பட்டு மாவட்ட தி. மு கழகத் தேர்தல் கூட்டம் ஒன்று 19—5—50 வெள்ளி மாலை ஐந்து மணிக்கு, காஞ்சிபுரம் "திராவிட நாடு" நிலையத்தில் நடைபெறும்.

மேற்படி மாவட்டத்தில் இது வரை அமைத்துள்ள கிளைக் கழகங்கள் ஒவ்வொன்றிலிருந்தும், இரண்டு பிரதிநிதிகள்வீதம் தேர்ந்தெடுப்பதுடன் அப்பிரதிநிதிகள் அனைவரும் மாவட்டத் தேர்தல் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளும் வகையில், செங்கற்பட்டு மாவட்ட கிளைக் கழக நிர்வாகிகள் உடன் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

குறிப்பு:—செங்கற்பட்டு மாவட்ட கிளைக் கழகங்களின் பிரதிநிதிகளின் பெயர்கள், விவரம் முதலியவைகளையும் எனக்குக் கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டுகிறேன்.

என். வி. நடராசன்
செயலாளர்
அமைப்புக் குழு
தி. மு. கழக தலைமை நிலையம்

கால்நடைகளுக்கு இன்ஷியூரன்ஸ் திட்டம்

நியூயார்க், மே 10—

கொலராடோவில் டென்வர் என்ற இடத்தில் நாய்களுக்கும் ஆயுள் இன்ஷியூரன்ஸ் திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வருஷத்திற்கு ரூ. 44 பிரிமியம் கட்டவேண்டுமாம்.

இத்திட்டம் சீக்கிரமே புனே [illegible] ன், பிரிட்டன் [illegible] சிக்கப்படவிருக்கிறதாம்.

6 மாதம் முதல் 8 வயது வரையுள்ள நாய்கள் மட்டுமே இன்ஷியூரன்ஸ் செய்ய அனுமதிக்கப்படும். வைத்திய பரிசோதனை முடிந்த பிறகு அந்த நாய்மீது ஒரு அடையாள நெம்பர் வைக்கப் படுமாம். இதுவரை சுமார் 3000 நாய்கள் இன்ஷியூரன்ஸ் செய்யப்பட்டிருக்கின்றன.

இம்மாதிரி இன்ஷியூர் திட்டம் கால்நடைகளுக்கும் விஸ்தரிக்கும் திட்டம் ஆலோசிக்கப்பட்டு வருகிறதாம்.

முன்ஷியின் பதவி

லண்டன், மே. 10—

இந்திய சர்க்காரின் மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ள தோழர் கே. எம். முன்ஷி நேற்று ஊருக்குப் புறப்பட்டுவிட்டார்.

தனக்கு சர்க்காரில்மந்திரியாக சேவை செய்ய வேண்டும் என்ற அழைப்பு மட்டுமே வந்திருப்பதாகவும், தனக்குக் கைத்தொழில் இலாகா தரப்படுமோ என்பது பற்றி தனக்கே தெரியாது என்றும் கூறினார்.

இலங்கை இந்தியர் குடி உரிமை

இலங்கையில் பிறந்த இந்தியர்களுக்கு பிரஜாவுரிமை அளிக்கும் வகையில் இந்தியர், பாகிஸ்தானியர் பிரஜாவுரிமை சட்டத்தில் சில மாறுதல்களைக் கொண்டு வரும் அரசாங்கம். அதேசமயத்தில் இலங்கையின் சுதேச பிரஜைகளுக்குக் கிடைக்கும் அதே சலுகைகளை அவர்களும் ஏக சமமாகப் பெற முறை செய்யுமா? என்று நேற்றைய தினம் தோழர் ஏ. ஈ. குணசிங்காவைப் பேட்டி கண்டபோது அவரிடம் கேட்டேன்.

இந்தக் கேள்விக்குதோழர் குணசிங்கா அளித்தபதிலில் "உத்தியோகம் வேலை சம்பந்தப்பட்ட விஷயங்களில் சிங்களவர்களுக்குக் காட்டப்படும் அதேஅளவு சலுகையைத் தமிழருக்கும் காட்டுவது, இலங்கையில் பிறந்த இந்தியர்கள் கோருவது அநீதியானதும், பிழையானதுமாகும்" என்று கூறினார்.

சுதேசிகளையும், சுதேசிகள் அல்லாதவர்களையும் ஒரே மாதிரியாகக் கணிக்கும்படி கோருவது வேடிக்கையானதென்றும், பிரஜாவுரிமைச் சட்டத்தின் நோக்கத்துக்கே அது மாறானதென்றும் தோழர் குணசிங்கா மேலும் கூறினார்.

தோழர் குணசிங்காவின் இந்த அபிப்பிராயமே அரசாங்கத்தின் அபிப்பிராயமாகவுமிருந்தால், இன்றுள்ள இலங்கைவாழ் இந்தியர்களுக்குப் பிரஜா உரிமை அளிக்கும் பிரச்னை சுமுகமாக தீர்க்கப்படலாம் என்ற நம்பிக்கை, அடியோடு அடிபட்டுப் போகிறது என அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

வம்சாவழிப் பிரஜைகளுக்கும், பதிவுப் பிரஜைகளுக்கும் சம அந்தஸ்து கோருவது பற்றி இலங்கை இந்தியர் காங்கிரஸ் மகாநாட்டில் அதன் தலைவர் தோழர் கே. இராஜலிங்கம் சமீபத்தில் பேசியதுதான், இந்தப் புதிய பிரச்னை எழக் காரணமாயிருக்கலாம்.

பகிஷ்காரத்தை வாபஸ்பெறுவதென்று தீர்மானித்த இக் காங்கிரஸ் காரியக் கமிட்டிக்குமதோழர் குணசிங்காவின் இந்த அபிப்பிராயம், பெருங்குழப்பத்தை உண்டு பண்ணக்கூடும்.

பிரஜாவுரிமைச் சட்டம் பகிஷ்காரத்தை வாபஸ் பெறுவதை இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் தோழர் வி. வி. கிரி, ஆதரித்துள்ளாரென்று தெரிகிறது.

போரில் மாண்டவர்களுக்கு நினைவுச் சின்னம்

பலஸ்தீனம் போரில் மாண்ட எகிப்தியர்களுக்காக ஒரு ஞாபகச் சின்னம் எழுப்ப எகிப்து சர்க்கார் தீர்மானித்திருக்கிறது.

இராமநாதபுர மாவட்ட தி. மு. க. தோழர்களுக்கு

இராமநாதபுர மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதலாவது மாவட்ட மாநாட்டை விரைவில் நடத்த வேண்டுமென்று, தலைமைக் கழக அமைப்பாளர் அறிக்கை விடுத்திருப்பதால், சந்தப் புத்தகம் பெற்றவர்கள் தங்கள் கழக மாவட்டக் கழக [illegible] டிச்சி [illegible] உடன் பணத்துடன் [illegible] அனுப்ப வேண்டுகிறேன். மேற்கொண்டு சந்தாப் புத்தகம் கேட்டவர்களுக்கு விரைவில் அனுப்பப்படும்.

எம். எஸ். இராமசாமி
செயலாளர் இ. மா. தி. மு. க

இனி நடப்பவை

சைதாப்பேட்டை:—மறுமலர்ச்சி சொற்பயிற்சி மன்றத்தின் சொற்பயிற்சிக் கூட்டம் 12-5-50 மாலை 6 மணிக்கு சடையப்பமுதலி தெரு, 2, இல்லத்தின் மேல்மாடியில் நடைபெறும்.

• • •

ஆரணி:—கலைவாணர்நிலைதிறப்பு விழா மார்க்கெட் ரோட் 60 6 நம்பர் கடையில் தோழர் ஏ. சி. ராஜன் அவர்கள் முயற்சியால் 13-5-50 மாலை தோழர் ஆர். குட்டி தலைமையில் தோழர் சி. பி. சிற்றரசு அவர்களால் திறப்புவிழா நடைபெறும்.

அன்றுமாலை 6 மணிக்கு குயப்பாளையம் பஞ்சாயத்திடலில் மேற்படியார் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும், அவ்வமயம் "கலையும் நமது நிலையும்" என்பதைப்பற்றி தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

• • •

சதும்பேரி:— பகுத்தறிவு நடிகமன்றத்தாரால் (13-5-50) சனிக்கிழமை இரவு ஆசிரியர் வீரன் வேலாயுதம் அவர்களின் நினைவுப் பந்தலில் தோழர் எம். குப்புசாமி அவர்கள் தலைமையின் கீழ், திராவிட முன்னேற்றக் கழக செயலாளர் தோழர் வி. கே. பெருமாள் அவர்களால் தயாரிக்கப்பட்ட 'சீர்திருத்தவாதி' என்ற பகுத்தறிவு நாடகம் நடைபெறும்.

குதிரைமீது சுற்றுப்பிரயாணம்

ரோம், மே 10—

ஜெர்மன் சீமாட்டி எல்லெஸ்வான் ஹோகென் என்பவர், ரோமுக்கு 300 மைல் குதிரை சவாரியிலேயே யாத்திரையை முடித்திருக்கிறார். பவேரியாவிலுள்ள தன் இடத்திலிருந்து ரோமுக்கு வர 50 நாட்கள் ஆகியதாம்.

ஒரு ஜெர்மன் என்ற காரணத்தால் இத்தாலியில் பல ஹோட்டல்களில் தங்க இவருக்கு இடம் மறுக்கப்பட்டதாம். போப்பாண்டவர் முன்பு போப்துதாராக ஜெர்மனியில் இருந்தபோது பெர்லினில் இவர் வீட்டில்வந்துதான் தங்குவாராம்.

தங்க துப்பாக்கிப் பரிசு

லண்டன், மே 10—

ஸயாம் மன்னர் சமீபத்தில் திருமணம் செய்து கொண்டதை யொட்டி, அவருக்குப் பரிசாக ஒரு தங்க துப்பாக்கியை அனுப்பியிருக்கிறார். இதற்கு முன்பு இருந்த ஸயாம் மன்னர், துப்பாக்கியில் சுடப்பட்டு மாண்டதால், இந்தப் பரிசு அனுப்புவது அவ்வளவு உசிதமாக இருக்காது என்ன கருதி பாங்காக் சுங்க அதிகாரிகள் இதை தடுத்துவிட்டனர் என்று, டெய்லி மெயில் பாங்காக் நிருபர் கூறுகிறார்.

இலங்கையில் சைக்கிள் ரிக்ஷா

கொழும்பு, மே 10—

ரிக்ஷாக்களை இழுக்க புதிதாக வருபவர்களுக்கோ, அல்லது லைசென்ஸைப் புதுப்பிக்கவரும் ரிக்ஷாக்காரர்களுக்கோ இனி லைசென்ஸ் கொடுப்பதில்லை என்று கொழும்பு முனிசிபாலிட்டி தீர்மானித்திருக்கிறது.

ஆள் இழுக்கும் ரிக்ஷாக்களை அடியோடு எடுத்துவிட்டு, அதற்குப் பதில் சைக்கிள் ரிக்ஷா முதலிய வேறு சாதனங்களை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதுஒரு அம்சம் எனத் தெரிகிறது.

தென்னிந்தியர்களில் அநேகம் பேர் ரிக்ஷா இழுக்கும் தொழிலில் ஈடுபட்டிருப்பதால் அவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவர்.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

13 - 5 - 50

ஆரணி :—சி. பி. சிற்றரசு.

14 - 5 - 50

திட்டக்குடி : சி. பி. சிற்றரசு.
(வேலூர் வேலப்பாடி) :—என். வி. நடராசன்.

தி. மு. கழக பொதுக்கூட்டங்கள்

காளாப்பூர்

காளாப்பூர், ஏப். 27—

இவ்வூர் தி மு கழகத்தின் சார்பில, தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றச்சங்கத்தில் ஓர் பொதுக்கூட்டம் 17-4-50-ல் நடைபெற்றது. கூட்டத்திற்குத் தோழர் மு. பெ முத்தையா தலைமை வகித்து, ஜாதி இந்துக்களின் அட்டகாசம், தாழ்த்தப்பட்டோர் முன்னேற வேண்டிய அவசியம் ஆகியவை குறித்துப் பேசியபின், தோழர் ராஜாராம் வீழ்ச்சியுற்ற திராவிடர் எழுச்சியுறவே நமது கழகம் பாடுபடுகிறது என்றும், மக்கள் இதில் சேர்ந்து ஆதரவுதர வேண்டுமென்றும் சொற்பொழிவாற்றினர். முடிவில் தோழர் மச்சகாளை நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

சேலம்

சேலம், ஏப். 28—

23-4-50 மாலை 6 மணிக்கு விக்டோரியா மார்க்கெட மைதானத்தில் பொன்னம்மாப்பேட்டை தி. மு. க. வின் சார்பாக பொதுக்கூட்டம் நடைபெற்றது. தற்கால அரசியல் 'நிலை' என்பதைப்பற்றி தோழர் ஏ.சித்தையன்தலைமையில், தோழர்கள் க. அன்பழகன், ஈ. வி. கே சம்பத், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, பொதுச் செயலாளர். சி. என். அண்ணாதுரை ஆகியோர், நீண்டதோர் கருத்து மிக்க சொற்பொழிவு ஆற்றினர் முடிவில் நன்றியறிதலுடன் கூட்டம் முடிவுற்றது.

பவானி

பவானி, மே 1—

30-4-50 தி. மு. கழகத்தின் சார்பில் ஓர் மாபெரும்பொதுக்கூட்டம் நடைபெற்றது அதுபோது தோழர் ஆர். கே. பெருமாள் முன்மொழிய, ஆமோதித்து தோழர் சொக்கலிங்கம் வழிமொழிய தோழர் பா. கி. சுவாமிநாதன் கூட்டத்திற்குத் தலைமைத் தாங்கினர்.

முகவுரையாக தலைவர் தி. மு. கழகம் மிகமிக வேகமாக வளர்ந்து, நாட்டிலே நல்லறிவுப் பிரச்சாரம் செய்து வருகிறதென்றும், வேறு எந்தக் கட்சியும் செய்யாத. செய்ய முற்படாத காரியங்களைதி.மு கழகம் செய்து வருகிறதென்றும், விடுதலை, விடுதலை, விடுதலை என்று பாரதியார் பாடிப்போந்த அந்த மூன்று விடுதலையை அதாவது சமூகாய, பொருளாதார, அரசியல் விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டு தி. மு. கழகம் பாடுபடுகிறதென்றும் பேசினர்.

அடுத்துத் தோழர் இரெ. இளம்வழுதி அவர்கள் வைதிகத்தாலும், மதம், கடவுள் என்கிற பெயரால் விளையக்கூடிய தீங்கை விளக்கியும், தி மு. க நோக்கம், இந்து சட்ட சீர்திருத்த மசோதா இந்தியாவின் அயல்நாட்டு ஸ்தானீகர்களின் நிலைமை ஆகியவற்றை விளக்கியும் சுமார் 2 மணி நேரம் பேசினர் தோழர் ஆர். கே. பெருமாள் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

மதுரை

மதுரை, ஏப் 25—

23—4—50 மாலை கிருஷ்ணராயர் தெப்பக்குள மைதானத்தில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தோழர் அ. பிச்சை அவர்கள் தலைமை வகித்தார். தோழர் கே. எஸ். ராஜமான் அவர்கள் நெசவுத் தொழிலாளர் குறைகள் குறித்தும், அரசாங்கம் அது பற்றிச் சரியான கொள்கைகளைக் கடைப்பிடிக்காமல் இருப்பது பற்றியும் பேசியபின், தோழர் எம். அய்யாசாமி அவர்கள். இந்தியக் குடியரசு தோன்றியபின்னும் சுதந்திர நாட்டில் மக்கள் கஷ்டங்கள் குறையவில்லையென்றும், வேலையில்லாத் திண்டாட்டம் மக்களை வாட்டிவதைக்கிறதென்றும். ஆலைத் தொழிலாளர் நிலை நாளுக்குநாள் மோசமாகிக் கொண்டு வருகிறதென்றும், ஆள் குறைப்புத் திட்டத்தின் மூலம் முதலாளிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளால், நாட்டில் பசியும், பட்டினியும் பெருகிக்கொண்டே வருகிறதென்று குறிப்பிட்டு, விரிவானதோர் சொற்பொழிவாற்றினர்.

பின்னர்தோழர் எஸ். முத்து அவர்கள் உள்ளூர் காங்கிரஸ் 'தியாகி' களின் திருவிளையாடல்களைப்பற்றிப் பேசியபின் கூட்டம்நன்றி கூறலுடன்முடிவுற்றது மத்திய தி. மு. கழகக் கட்டிட நிதிக்காக தோழர் முத்து அவர்கள் வசூலித்த ரூ. 34—2—3 பையை மத்திய கழகக் கட்டிட நிதிக்கு அனுப்புவதாக முடிவு செயயப்பட்டது

ஆண்டிப்பட்டி

ஆண்டிப்பட்டி, மே 1—

29-4-50 மாலை தி. மு. கழகத்தின் சார்பில் ஓர் பொது கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு வாடிப்பட்டித் தோழர் வெங்கிடசாமி அவர்கள் தலைமைவகித்தார்தோழர்கள் க. அன்பழகன் எம். ஏ, எம் அய்யாசாமி. ஆகியோர் தி. மு. கழகத்தின் கொள்கைகளை விளக்கி அரியதோர் சொற்பொழி வாற்றினர்கள் பின்னர் செயலாளர்நன்றிகூற கூட்டம் முடிந்தது.

சங்கரன்கோவில்

சங்கரநயினர்கோயில், மே 1-

தி. மு. க. சார்பாக வள்ளுவர் திடலில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் 28-4-50 இரவு நடைபெற்றது.

தோழர் டி. ஆர். சுப்ரமணியம் முன்மொழிய, தோழர் ஆவுடையப்பன் வழிமொழிய தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து அவர்கள் தலைமையேற்று முகவுரை கூறிய பின் எட்டயபுரம் எஸ். கலிங்கன் அவர்கள் தி. மு. கழகமும் குறித்துப் பேசினர்

தோழர் எம் எஸ். இராமசாமி, அவர்கள் இன்றய கைத்தரியாளர் நிலை, பற்றியும், தோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் திராவிடம் பிரியவேண்டிய [illegible] சமுதாயம், அரசியல் ஆகியவற்றில் நாம் அடைந்துள்ள கீழ்நிலைமைகளை பேசியபின் தலைவர் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

இந்தோனேஷ்ய தேயிலையை பிரிட்டன் எதிர்பார்க்கிறது

லண்டன், மே. 10—

இந்தியா, இலங்கை சர்க்கார்களுடன் தேயிலை வாங்குவது விஷயமாக, பிரிட்டிஷ் சர்க்கார் நடத்திய பேச்சு வார்த்தைகள் பலனை அளிக்குமா என்பது குறித்து லண்டன் தேயிலை வியாபாரிகள் சந்தேகப்படுகின்றனர்.

இவ்விரு நாடுகளிலிருந்தும் இவ்வருஷம் வாங்கப்படும் தேயிலையின் அளவு, சென்ற வருஷத்தில் வாங்கியதைக் காட்டிலும் குறைவாகவே இருக்கும் என்று இவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இந்தியாவைவிட இலங்கை தன் தேயிலைக்கு இன்னும் அதிக விலையைக் கேட்கிறது. அப்படியே விலைகொடுத்தாலும், கிடைக்கும் தேயிலை அளவு குறைவாகவே இருக்கும்.

தேயிலை சப்ளை குறையும் பட்சத்தில் பிரிட்டன் இப்பொழுது ஒருவருக்கு அளித்து வரும் 2½ அவுன்ஸ் ரேஷனை 2 அவுன்ஸாகக் குறைக்கும்படியாக இருக்கும்.

இந்தோனேஷ்யாவிலிருந்து தேயிலை சப்ளை கிடைக்கலாம் என்று. டெய்லிமெயில் நிருபர் கூறுகிறார். இந்தோனேஷ்யாவில் இப்பொழுது முன்புள்ளதைவிட தேயிலை உற்பத்தி அதிகரித்திருக்கிறது. இந்தியா இலங்கை தேயிலை வியாபாரத்திற்குப் போட்டியாக இந்தோனேஷ்யா தலை தூக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொன்னம்மாப்பேட்டை

சேலம், ஏப் 29—

23—4—50 காலை திராவிட முன்னேற்றக் கழகக்கட்டிடத் திறப்பு விழாவின் பொதுக் கூட்டம், அழகிரி பந்தலில் ஆரம்பமாயிற்று. கூட்டத்திற்குத் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமை வகித்தார் தலைவர் கூட்டத்தின் அவசியத்தைப்பற்றிச் சிறிது நேரம் பேசியபின் தோழர் க. அன்பழகன் எம். ஏ. தி. மு. க கொடியின் தத்துவத்தைவிளக்கிப்பேசி கொடியினையேற்றுவித்தார். தோழர் ஈ. வி கே. சம்பத் அவர்கள் அழகிரிசாமியின் தொண்டைப்பற்றி அழகுற பேசி, அழகிரியின் படத்தைத் திறந்து வைத்தார். பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம், நாட்டின் நிலைமை சமுதாயம் ஆகியவைபற்றி நீண்டதோர்சொற்பெருக்காற்றினர். அதுபோது சேலம் பொன்னம்மாப்பேட்டை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, மத்திய திராவிட முன்னேற்றக் கழகக் கட்டிட நிதிக்காக பொதுச்செயலாளரிடம் ரூ. 100 கொடுக்கப்பட்டது செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

20-5-50
சனி இரவு 9-30 மணிக்கு
தி. மு. கழக
கட்டிட நிதிக்காக
சென்னை
முன்னேற்ற நாடகக் கழகத்தார்
வழக்கு வாபஸ்
கல்சுமந்த கசடர்
அகல்யா (வ. ரா.)
ஆகிய மூன்று நாடகங்களை நடத்துவர்
இடம்:-சௌந்தர்யமஹால்
(கோவிந்தப்பநாய்க்கன் தெரு, சென்னை)
கட்டணம் :- ரூ. 5, 3, 2, 1.
கே. கோவிந்தசாமி, டி. எம். பார்த்தசாரதி.
அமைப்பாளர்கள்
டிக்கட்டுகள் கிடைக்குமிடம்:—
"மாலைமணி" அலுவலகம் சென்னை—1

மதுரை மாவட்ட
1-வது தி. மு. க. மாநாடு
[illegible] யில்
சோழவந்தானில் நடைபெறும்
தலைவர் :— ஈ. வெ. கி. சம்பத்
துவக்குபவர் :—கே. கே. நீலமேகம்
மற்றும் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களும்
கலைவாணர் நகைச்சுவை அரசு
தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களும்
மாநாட்டு நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளுமாறு அழைக்கப்பட்டிருக்கிறார்கள்
சி. என். ஏ., கே. ஆர். ஆர். நடிக்கும்
'சந்திரமோகன்' நாடகம் உண்டு
செயலாளர்கள், எஸ். முத்து, என். முத்து.
நா. ஆவுடையப்பன், வரவேற்புத் தலைவர்.
எம். அய்யாசாமி, விளம்பர உறுப்பினர்.
தற்போதைய மாநாட்டு அலுவலகம் :—
324. அழகரடி, மதுரை.

சென்னை போலீசின் திறமை

இலங்கை போலீஸ் அதிகாரி பாராட்டு

கொழும்பு, மே 10—

சமீபத்தில் தென்னிந்தியாவுக்கு வந்து இங்குள்ள போலீஸ் முறைகளை நேரில் கண்டுவிட்டுச் சென்ற இலங்கைப் போலீஸ் சீனியர் அதிகாரி தோழர் வி. டி. திசநாயகா சென்னையில் போக்குவரத்தைப் போலீசார் மிகவும் திறமையாகக் கட்டுப்படுத்தியிருப்பதை மிகவும் பாராட்டியிருக்கிறார்.

சென்னையில் கையாளப்படும் முறைகளில் சிலவற்றை இலங்கையும் பின்பற்றலாம் என்று அவர் கூறுகிறார்.

வெட்டுக்கிளி படையெடுப்பு

அம்மான், மே 10—

ஹெட்ஜாஸிலிருந்து வெட்டுக்கிளிகள் ஜார்டன் எல்லையைக் கடந்து வந்துவிட்டனவென்று ஜார்டன் விவசாய மந்திரி இலாகாவுக்கு செய்தி கிடைத்திருக்கிறது. இந்த ஆபத்தைத் தவிர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஏஜெண்டு தேவை
திருச்சியில் நமது "மாலை மணி"யை விற்பனை செய்ய, முன் பணம் கட்டக் கூடிய பொறுப்புள்ள ஒரு ஏஜெண்டு தேவை.
மானேஜர்
"மாலைமணி"

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street Madras-1.